TNPSCJOB

# Don
# கணக்கு
# 6

முழுமையாக திருத்தப்பட்ட பதிப்பு

**பருவம் - I**
**+**
**பருவம் - II**
**+**
**பருவம் - III**

- நினைவுக் குறிப்புகள்
- தீர்க்கப்பட்ட எடுத்துக்காட்டுகள்
- தீர்க்கப்பட்ட பயிற்சி வினாக்கள்
- எண்ணற்ற கூடுதல் வினாக்கள்
- அலகுத் தேர்வுகள்
- மாதிரி வினாத்தாள்




டான் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB

# Don

# கணக்கு

பருவம் - I
+
பருவம் - II
+
பருவம் - III

6
முழு ஆண்டு

2024-2025
FULLY REVISED EDITION



- முக்கியச் சூத்திரங்கள் & நினைவுக் குறிப்புகள்
- தீர்க்கப்பட்ட எடுத்துக்காட்டு வினாக்கள்
- தீர்க்கப்பட்ட பயிற்சி வினாக்கள்
- தீர்க்கப்பட்ட கூடுதல் சிந்தனை வினாக்கள்
- அலகுத் தேர்வுகள்
- மாதிரி வினாத்தாட்கள் (3 பருவங்களுக்கும்)

டான் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

TNPSCJOB | www.tnpscjob.com

Don

# Don
## 6-ஆம் வகுப்பு
**கணக்கு** (3 பருவங்களும் இணைந்தது)

புதிய பாடத்திட்டத்தின்படி

© Don Publications (P) Ltd.

Warning : *All rights reserved. No part of this publication may be reproduced or stored in a retrieval system or transmitted in any form or by any means without the prior written permission of the Publisher, the copy-right holder.*

## பதிப்புரை

*6ஆம் வகுப்பிற்கான **Don** கணக்குப் புத்தகம் தமிழக அரசின் தற்போதைய பாடத்திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பாடநூலை மையமாகக் கொண்டு திறமையான ஆசிரியர் குழு மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.*

*இப்புத்தகத்தில், அனைத்துப் பாடங்களிலும் ஒவ்வொரு பாடத்திற்குமான முக்கிய நினைவுக் குறிப்புகள் மற்றும் முக்கியச் சூத்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் அனைத்து எடுத்துக்காட்டு வினாக்களுக்கும், பயிற்சி வினாக்களுக்கும் முழுமையாக தீர்வுகள் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் எண்ணற்ற கூடுதல் கணக்குகள் [Creative questions] தீர்வுகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு அலகுத்தேர்வு [Unit question paper] கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு மாதிரி வினாத்தாள் கொடுக்கப்பட்டுள்ளது.*

*இப்புத்தகத்தை மாணவச்செல்வங்கள் பயன்படுத்தி, தேர்வில் வெற்றி பெற எங்கள் உளமார்ந்த வாழ்த்துக்கள்.*

**S.A. சுரேஷ் குமார்**, MCA., MBA.,
டாண் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

நூலாக்கம்
டாக்டர். **S.A. ராஜ்குமார்** *MBBS., MS (EM)*
*Director, Academics.*

"This book is meant for educational and learning purposes. The author(s) of this book has / have taken all reasonable care to ensure that the contents of this book do not violate any existing copyright or other intellectual property rights of any person / any publisher in any manner whatsoever. In the event the author(s) / the publishers has / have been unable to track any source and if any copyright has been inadvertently infringed, please notify the publisher in writing for corrective action."

பதிப்பகத்தார்:

டாண் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

**3/100/1,** உத்தமபாண்டியன்குளம், தூத்துக்குடி மெயின் ரோடு, **திருநெல்வேலி** - 627 351.

☎ **(0462) 2520977, 2520978.** செல்: **73730 88821, 94433 39941**. மின்னஞ்சல்: **feedback@donpltd.com**

புதிய எண்: **29A,** பண்டாரம் தெரு, வடபழனி, சென்னை - 600 026.

☎ **(044) 48565226.** செல்: **73730 88893.** மின்னஞ்சல்: **feedback@donpltd.com**

Visit us at | : 94890 51851 | For online purchase : www.donbookart.com | www.donbooks.co.in

Don

**கணிதம்** **6ம் வகுப்பு**

## பொருளடக்கம்...

### பருவம் - I


| | | |
|---|---|---|
| 1. | எண்கள் | 08 |
| 2. | இயற்கணிதம் – ஓர் அறிமுகம் | 30 |
| 3. | விகிதம் மற்றும் விகித சமம் | 39 |
| 4. | வடிவியல் | 56 |
| 5. | புள்ளியியல் | 73 |
| 6. | தகவல் செயலாக்கம் | 87 |
| | மாதிரி வினாத்தாள் | 93 |


### பருவம் - II


| | | |
|---|---|---|
| 1. | எண்கள் | 98 |
| 2. | அளவைகள் | 121 |
| 3. | பட்டியல், இலாபம் மற்றும் நட்டம் | 145 |
| 4. | வடிவியல் | 160 |
| 5. | தகவல் செயலாக்கம் | 175 |
| | மாதிரி வினாத்தாள் | 188 |


### பருவம் - III


| | | |
|---|---|---|
| 1. | பின்னங்கள் | 192 |
| 2. | முழுக்கள் | 219 |
| 3. | சுற்றளவு மற்றும் பரப்பளவு | 232 |
| 4. | சமச்சீர்த் தன்மை | 255 |
| 5. | தகவல் செயலாக்கம் | 273 |
| | மாதிரி வினாத்தாள் | 285 |

Don

# எண் அமைப்புகள்

### மெய் எண்கள்

கணிதத்தில் தொடர்ச்சியான அளவிடையொன்றில் ஒரு அளவைக் குறிக்கும் பெறுமானமாகும்.

### விகிதமுறு எண்கள்

$\frac{a}{b}$ என்ற வடிவில் எழுதக்கூடிய ஒரு எண்ணானது விகிதமுறு எண் எனப்படும். இங்கு a மற்றும் b முழுக்களாகும் மற்றும் $b \neq 0$.

### முழுக்கள்

இயல் எண்கள் மற்றும் அவற்றின் குறை எண்கள் இவற்றுடன் பூச்சியம் சேர்ந்த கணம் முழுக்கள் எனப்படும்.

$$Z = \{0, \ldots -3, -2, -1, 0, 1, 2, 3, \ldots\} = \{0, \pm 1, \pm 2, \pm 3, \ldots\}$$

### முழு எண்கள்

இயல் எண்களுடன் பூச்சியம் சேர்ந்தது முழு எண்களின் கணமாகும்.

$$W = \{0, 1, 2, 3, 4, \ldots\}$$

### இயல் எண்கள்

எண்ணுவதற்குப் பயன்படும் 1, 2, 3, .... என்பன இயல் எண்கள் எனப்படும்.

$$N = \{1, 2, 3, 4, \ldots\}$$

### ஒற்றை எண்கள்

ஓர் எண்ணை இரண்டு சம குழுக்களாகப் (இரண்டு இரண்டாக) பகுக்க இயலாது எனில், அது ஒற்றை எண் எனப்படும்.

எ.கா : 1, 3, 5, 7, 9, 11, ......

### இரட்டை எண்கள்

ஓர் எண்ணை இரண்டு சம குழுக்களாகப் பகுக்க இயலும் எனில், அது இரட்டை எண் எனப்படும்.

எ.கா : 2, 4, 6, 8, 10, 12 ......

### பகா எண்

1 ஐ விட அதிகமான ஓர் இயல் எண்ணானது, 1 மற்றும் அதே எண்ணை மட்டுமே காரணிகளாகப் பெற்றிருப்பின், அந்த எண் பகா எண் எனப்படும்.

எ.கா : 2, 3, 5, 7, 11, 13, 17, 19, 23, 29, 31, 37, 41, .....

### பகு எண்

ஓர் இயல் எண்ணானது இரண்டிற்கும் மேற்பட்ட காரணிகளைப் பெற்றிருப்பின், அந்த எண் பகு எண் எனப்படும்.

எ.கா : 4, 6, 8, 9, .....

# வடிவங்கள்



# முதல் பருவம்

Don

# 1 எண்கள்

## நினைவில் கொள்க:

| மிகப் பெரிய எண் | கூட்டுக | சமம் | மிகச் சிறிய எண் | எண்ணின் பெயர் |
|---|---|---|---|---|
| மிகப் பெரிய ஓரிலக்க எண் 9 | + 1 | = | மிகச் சிறிய ஈரிலக்க எண் 10 | பத்து |
| மிகப் பெரிய ஈரிலக்க எண் 99 | + 1 | = | மிகச் சிறிய மூவிலக்க எண் 100 | நூறு |
| மிகப் பெரிய மூவிலக்க எண் 999 | + 1 | = | மிகச் சிறிய நான்கிலக்க எண் 1000 | ஆயிரம் |
| மிகப் பெரிய நான்கிலக்க எண் 9999 | + 1 | = | மிகச் சிறிய ஐந்திலக்க எண் 10000 | பத்தாயிரம் |
| மிகப் பெரிய ஐந்திலக்க எண் 99999 | + 1 | = | மிகச் சிறிய ஆறிலக்க எண் 100000 | இலட்சம் |
| மிகப் பெரிய ஆறிலக்க எண் 999999 | + 1 | = | மிகச் சிறிய ஏழிலக்க எண் 1000000 | பத்து இலட்சம் |
| மிகப் பெரிய ஏழிலக்க எண் 9999999 | + 1 | = | மிகச் சிறிய எட்டிலக்க எண் 10000000 | ஒரு கோடி |

| இந்திய எண் முறை | | | பன்னாட்டு முறை | | |
|---|---|---|---|---|---|
| பிரிவுகள் | பெயர் | எண்ணுருக்கள் | பெயர் | எண்ணுருக்கள் | பிரிவுகள் |
| ஒன்றுகள் | ஒன்று | 1 | ஒன்று | 1 | ஒன்றுகள் |
| | பத்து | 10 | பத்து | 10 | |
| | நூறு | 100 | நூறு | 100 | |
| ஆயிரங்கள் | ஆயிரம் | 1,000 | ஆயிரம் | 1,000 | ஆயிரங்கள் |
| | பத்தாயிரம் | 10,000 | பத்தாயிரம் | 10,000 | |
| இலட்சங்கள் | இலட்சம் | 1,00,000 | நூறு ஆயிரம் | 100,000 | |
| | பத்து இலட்சம் | 10,00,000 | மில்லியன் | 1,000,000 | மில்லியன்கள் |
| கோடிகள் | கோடி | 1,00,00,000 | பத்து மில்லியன் | 10,000,000 | |
| | பத்துக் கோடி | 10,00,00,000 | நூறு மில்லியன் | 100,000,000 | |
| | நூறு கோடி | 100,00,00,000 | பில்லியன் | 1,000,000,000 | பில்லியன்கள் |
| | ஆயிரம் கோடி | 1000,00,00,000 | பத்துப் பில்லியன் | 10,000,000,000 | |

* ஓர் எண் + 1 = தொடரி
* ஓர் எண் – 1 = முன்னி

| ப.கோ | கோ | ப.இல | இல | ப.ஆ | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|---|---|---|---|
| பத்துக் கோடிகள் | கோடிகள் | பத்து இலட்சங்கள் | இலட்சங்கள் | பத்து ஆயிரங்கள் | ஆயிரங்கள் | நூறுகள் | பத்துகள் | ஒன்றுகள் |

அலகு – 1 | எண்கள்

## எடுத்துக்காட்டு 1.1

சூரியனுக்கும், பூமிக்கும் இடையே உள்ள தூரம் ஏறக்குறைய 92900000 மைல்கள். இதனை இந்திய எண் முறையில் காற்புள்ளியைப் பயன்படுத்தி படிக்க மற்றும் எழுதுக.

**தீர்வு :**

| பிரிவுகள் | கோடிகள் | | இலட்சங்கள் | | ஆயிரங்கள் | | ஒன்றுகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இட மதிப்பு | ப.கோ | கோ | ப.இல | இல | ப.ஆ | ஆ | நூ | ப | ஒ |
| எண்ணுரு | | 9 | 2 | 9 | 0 | 0 | 0 | 0 | 0 |
| காற்புள்ளியைப் பயன்படுத்துதல் | 9, 29, 00, 000 | | | | | | | | |
| எண்ணின் பெயர் | ஒன்பது கோடியே இருபத்து ஒன்பது இலட்சம் | | | | | | | | |

## எடுத்துக்காட்டு 1.2

சூரியனுக்கும், பூமிக்கும் இடையே உள்ள தூரம் ஏறக்குறைய 92900000 மைல்கள். இதனை பன்னாட்டு எண் முறையில் காற்புள்ளியைப் பயன்படுத்தி படிக்க மற்றும் எழுதுக.

**தீர்வு :**

| பிரிவுகள் | பில்லியன்கள் | | | மில்லியன்கள் | | | ஆயிரங்கள் | | | ஒன்றுகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இட மதிப்பு | நூ.பி | ப.பி | பி | நூ.மி | ப.மி | மி | நூ.ஆ | ப.ஆ | ஆ | நூ | ப | ஒ |
| எண்ணுரு | | | | | 9 | 2 | 9 | 0 | 0 | 0 | 0 | 0 |
| காற் புள்ளியைப் பயன்படுத்துதல் | 92, 900, 000 | | | | | | | | | | | |
| எண்ணின் பெயர் | தொண்ணூற்று இரண்டு மில்லியன் தொள்ளாயிரம் ஆயிரங்கள் | | | | | | | | | | | |

## எடுத்துக்காட்டு 1.3

ஓர் இலட்சத்தில் எத்தனை ஆயிரங்கள் உள்ளன?

**தீர்வு :**

| இட.மதிப்பு | இல | ப.ஆ | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|---|---|
| 1 இலட்சம் | 1 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 1 ஆயிரம் | | | 1 | 0 | 0 | 0 |

$\frac{1 \text{ இலட்சம்}}{1 \text{ ஆயிரம்}} = \frac{100000}{1000} = 100$

இலட்சமானது ஆயிரத்திலிருந்து 2 இடங்கள் இடப்புறமாக உள்ளது. இது $10 \times 10 = 100$ முறை ஆயிரங்கள் ஆகும். எனவே, 1 இலட்சம் = 100 ஆயிரங்கள் ஆகும்.

## எடுத்துக்காட்டு 1.4

ஒரு மில்லியனில் எத்தனை ஆயிரங்கள் உள்ளன?

**தீர்வு :**

| இடமதிப்பு | மி | நூ.ஆ | ப.ஆ | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மில்லியன் | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 1 ஆயிரம் | | | | 1 | 0 | 0 | 0 |

$\frac{1 \text{ மில்லியன்}}{1 \text{ ஆயிரம்}} = \frac{1000000}{1000} = 1000$

மில்லியன் ஆயிரத்திலிருந்து 3 இடங்கள் இடப்புறமாக உள்ளது. எனவே, 1 மில்லியன் = 1000 ஆயிரங்கள் ஆகும்.

**இவற்றை முயல்க**

1. 4576 இன் தொடரி ________.

   விடை : **4577**

2. 8970 இன் முன்னி ________.

   விடை : **8969**

3. 999 + 1 = ________.

   விடை : **1000**

4. 10000 – 1 = ________.

   விடை : **9999**

5. சிறிய 5 இலக்க எண்ணின் முன்னி ________.

   விடை : **9999**

6. 5 இலக்க எண் அல்லது அதற்கு மேலான இலக்கங்களுடைய எண்கள் அமைந்த மூன்று பொருட்களின் பெயர்களை எண்களுடன் கூறுக.

   விடை : (i) இலைகள்
   (ii) மணல்
   (iii) நட்சத்திரங்கள்

7. ஒரு மாவட்டத்தில் 10 இலட்சம் மக்கள் உள்ளனர். அதே போன்று 10 மாவட்டங்களில் உள்ள மொத்த மக்கள் தொகை யாது?

   விடை :

   ஒரு மாவட்டத்தில் உள்ள மக்கள் = 10,00,000

   10 மாவட்டங்களில் உள்ள மக்கள்= 10 × 10,00,000

   = 1,00,00,000

8. அரசானது கல்விக்காகக் குறிப்பிட்ட ஒரு மாவட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் ₹ 2 கோடியைச் செலவு செய்கிறது. எனில், 10 மாதத்தில் செலவிடப்படும் மொத்த தொகை யாது?

   விடை : கல்விக்காக ஒரு மாவட்டத்திற்கு செலவு செய்யப்பட்ட தொகை = ₹2 கோடி

   10 மாதத்தில் செலவு செய்யப்பட்ட தொகை

   = 10 × 2 கோடி

   ₹=20 கோடி

9. அட்டவணையை நிரப்புக.

| இடமதிப்பு / எண் | ப. கோ | கோ | ப. இல | இல | ப. ஆ | ஆ | நூ | ப | ஒ | எண்ணின் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1670 | | | | | | 1 | 6 | 7 | 0 | ஆயிரத்து அறுநூற்று எழுபது |
| 47684 | | | | | 4 | 7 | 6 | 8 | 4 | நாற்பத்து ஏழாயிரத்து அறுநூற்று எண்பத்து நான்கு |
| 120001 | | | | 1 | 2 | 0 | 0 | 0 | 1 | ஒரு இலட்சத்து இருபதாயிரத்து ஒன்று |
| 7800500 | | | 7 | 8 | 0 | 0 | 5 | 0 | 0 | எழுபத்து எட்டு இலட்சத்து ஐநூறு |
| 53409098 | | 5 | 3 | 4 | 0 | 9 | 0 | 9 | 8 | ஐந்து கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து ஒன்பதாயிரத்து தொண்ணூற்று எட்டு |
| 198765912 | 1 | 9 | 8 | 7 | 6 | 5 | 9 | 1 | 2 | பத்தொன்பது கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து அறுபத்து ஐந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து பன்னிரெண்டு |

10. தவறாக இடம் பெற்றுள்ள காற்புள்ளியைக் கண்டுபிடித்துச் சரியான முறையில் எழுதுக.

   விடை :

   1) இந்திய முறை :

   56,12,34,0,1,5 இன் சரியான முறை = 56, 12, 34, 015

   9,90,03,2245 இன் சரியான முறை = 99, 00, 32, 245

   2) பன்னாட்டு முறை :

   7,5613,4534 இன் சரியான முறை = 756, 134, 534

   30,30,304,040 இன் சரியான முறை = 3,030,304, 040

11. கீழ்க்காணும் எண்ணுருக்களை விரிவாக்கம் செய்க:

   i) எண்ணுரு : **2304567**

   விரிவாக்க வடிவம் : 2 × 1000000 + 3 × 100000 + 0 × 10000 + 4 × 1000 + 5 × 100 + 6 × 10 + 7 × 1

   ii) எண்ணுரு : **4509888**

   விரிவாக்க வடிவம் : 4 × 1000000 + 5 × 100000 + 0 × 10000 + 9 × 1000 + 0 × 100 + 8 × 10 + 8 × 1

iii) எண்ணுரு : 9553556

விரிவாக்க வடிவம் : $9 \times 1000000 + 5 \times 100000 + 5 \times 10000 + 3 \times 1000 + 5 \times 100 + 5 \times 10 + 6 \times 1$

**12. அடிக்கோடிட்ட இலக்கத்தின் இடமதிப்பைக் காண்க:**

(i) 3<u>8</u>41567

விடை : 8 இன் இடமதிப்பு $= 8 \times 100000 = 800000$ (எட்டு இலட்சம்)

(ii) 94<u>4</u>3810

விடை : 4 இன் இடமதிப்பு $= 4 \times 10000 = 40000$ (நாற்பதாயிரம்)

**13. பின்வரும் எண் பெயர்களிலிருந்து, எண்ணுருக்களை எழுதி, அவ்வெண்களில் 5 இன் இடமதிப்பைக் காண்க.**

i) நாற்பத்து ஏழு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து ஐநூற்று அறுபத்து ஒன்று

ii) ஒன்பது கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்து இருநூற்று நாற்பத்து ஒன்று

iii) பத்தொன்பது கோடியே ஐம்பத்து ஏழு இலட்சத்து அறுபதாயிரத்து முன்னூற்று எழுபது

விடை :

i) எண்ணுரு: 47,38,<u>5</u>61

5 இன் இடமதிப்பு $= 5 \times 100 = 500$ (ஐநூறு)

ii) எண்ணுரு: 9,82,<u>5</u>0,241

5 இன் இடமதிப்பு $= 5 \times 10000 = 50000$ (ஐம்பதாயிரம்)

iii) எண்ணுரு: 19,<u>5</u>7,60,370

5 இன் இடமதிப்பு $= 5 \times 1000000 = 5000000$ (ஐம்பது இலட்சம்)

**14. 10 இலட்சத்தில் எத்தனை நூறுகள் உள்ளன?**

தீர்வு :

10 இலட்சம் = 1000000

$\frac{10 \text{ இலட்சம்}}{1 \text{ நூறு}} = \frac{1000000}{100}$

எனவே 10 இலட்சத்தில் 1000 நூறுகள் உள்ளன.

**15. ஒரு மில்லியனில் எத்தனை இலட்சங்கள் உள்ளன?**

தீர்வு :

1 மில்லியன் = 1000000

$\frac{1 \text{ மில்லியன்}}{1 \text{ இலட்சம்}} = \frac{1000000}{100000} = 10$

எனவே 1 மில்லியனில் 10 இலட்சங்கள் உள்ளன.

**16. 10 இலட்சம் மாணவர்கள் இவ்வாண்டு பொதுத்தேர்வை எழுதுகின்றனர். ஒவ்வொரு தேர்வு மையத்திலும் 1000 மாணவர்கள் தேர்வு எழுதினால் எத்தனைத் தேர்வு மையங்கள் தேவை?**

தீர்வு :

பொதுத் தேர்வு எழுதும் மாணவர்கள் = 10 இலட்சம்

ஒரு தேர்வு மையத்தில் தேர்வு எழுதும் மாணவர்கள் = 1000

∴ 10 இலட்சம் மாணவர்கள் எழுத தேவைப்படும் தேர்வு மையம் $= \frac{10 \text{ இலட்சம்}}{1000}$

$= \frac{1000000}{1000} = 1000$

$= 1000$

## பயிற்சி - 1.1

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

i) மிகச் சிறிய ஏழிலக்க எண் ______. விடை : 10,00,000

ii) மிகப் பெரிய எட்டு இலக்க எண் ________.

விடை : 9,99,99,999

iii) 7005380 என்ற எண்ணில் 5 இன் இடமதிப்பு ________.

விடை : 5000 (ஐந்தாயிரம்)

iv) 76,70,905 என்ற எண்ணின் விரிவாக்கம் ________.

விடை : $7 \times 1000000 + 6 \times 100000 + 7 \times 10000 + 9 \times 100 + 5 \times 1$ (அல்லது) $7000000 + 600000 + 70000 + 900 + 5$

**2. சரியா, தவறா எனக் கூறுக:**

i) இந்திய முறையில் 67999037 என்ற எண்ணை 6,79,99,037 என எழுதுகிறோம்.

விடை : சரி

ii) ஓரிலக்க எண்ணின் தொடரி எப்போதும் ஓரிலக்க எண்ணாகும்.

விடை : தவறு

iii) மூவிலக்க எண்ணின் முன்னி எப்போதும் மூன்று அல்லது நான்கு இலக்க எண்ணாகும்.

விடை : தவறு

iv) $88,888 = 8 \times 10000 + 8 \times 100 + 8 \times 10 + 8 \times 1$

விடை : தவறு

Don

**3. மிகச் சிறிய ஆறிலக்க எண்களில் எத்தனை பத்தாயிரங்கள் உள்ளன?**

விடை : மிகச் சிறிய ஆறிலக்க எண் = 100000

$$\frac{\text{ஆறிலக்க எண்}}{\text{பத்தாயிரம்}} = \frac{100000}{10000} = 10$$

மிகச் சிறிய ஆறிலக்க எண்ணில் 10 பத்தாயிரங்கள் உள்ளன.

**4. காற்புள்ளியை உற்றுநோக்கி பின்வரும் எண்களில் 7 இன் இடமதிப்பை எழுதுக.**

i) 56,74,56,345

ii) 567,456,345

விடை :

i) 56,74,56,345 என்ற எண்ணில் 7 இன் இடமதிப்பு

= 7 × 10,00,000 = 70,00,000 (எழுபது இலட்சம்)

ii) 567,456,345 என்ற எண்ணில் 7 இன் இடமதிப்பு

= 7 × 1,000,000 = 7,000,000 (ஏழு மில்லியன்)

**5. காற்புள்ளியைப் பயன்படுத்திப் பின்வரும் எண்களைப் பன்னாட்டு முறையில் எழுதுக.**

i) 347056

ii) 7345671

iii) 634567105

iv) 1234567890

விடை :

i) 347,056 = முன்னூற்று நாற்பத்து ஏழாயிரத்து ஐம்பத்து ஆறு.

ii) 7,345,671 = ஏழு மில்லியன் முன்னூற்று நாற்பத்து ஐந்து ஆயிரத்து அறுநூற்று எழுபத்து ஒன்று.

iii) 634,567,105 = அறுநூற்று முப்பத்து நான்கு மில்லியன் ஐநூற்று அறுபத்தேழாயிரத்து நூற்று ஐந்து.

iv) 1,234,567,890 = ஒரு பில்லியன் இருநூற்று முப்பத்து நான்கு மில்லியன் ஐநூற்று அறுபத்து ஏழாயிரத்து எண்ணூற்று தொண்ணூறு.

**6. மிகப் பெரிய ஆறிலக்க எண்ணை எழுதி, அதை இந்திய மற்றும் பன்னாட்டு முறைகளில் காற்புள்ளி இடுக.**

விடை :

மிகப்பெரிய ஆறிலக்க எண் = 999999

இந்திய முறை = 9,99,999

(ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது)

பன்னாட்டு முறை = 999,999

(தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது)

**7. பின்வரும் எண்ணுருக்களின் எண் பெயர்களை இந்திய முறையில் எழுதுக.**

(i) 75,32,105

(ii) 9,75,63,453

விடை :

(i) 75,32,105 - எழுபத்து ஐந்து இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து நூற்று ஐந்து.

(ii) 9,75,63,453 - ஒன்பது கோடி எழுபத்து ஐந்து இலட்சத்து அறுபத்து மூன்று ஆயிரத்து நானூற்று ஐம்பத்து மூன்று.

**8. பின்வரும் எண்ணுருக்களின் எண் பெயர்களை பன்னாட்டு முறையில் எழுதுக.**

i) 345,678

ii) 8,343,710

iii) 103,456,789

விடை :

i) 345,678 - முன்னூற்று நாற்பத்து ஐந்தாயிரத்து அறுநூற்று எழுபத்து எட்டு.

ii) 8,343,710 - எட்டு மில்லியன் முன்னூற்று நாற்பத்து மூன்று ஆயிரத்து எழுநூற்று பத்து.

iii) 103,456,789 - நூற்று மூன்று மில்லியன் நானூற்று ஐம்பத்து ஆறு ஆயிரத்து எழுநூற்று எண்பத்து ஒன்பது.

**9. எண் பெயர்களை எண்ணுருக்களால் எழுதுக.**

i) இரண்டு கோடியே முப்பது இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து தொள்ளாயிரத்து எண்பது.

ii) அறுபத்து ஆறு மில்லியன் முன்னூற்று நாற்பத்தைந்து ஆயிரத்து இருபத்து ஏழு.

iii) எழுநூற்று எண்பத்து ஒன்பது மில்லியன் இருநூற்று பதிமூன்றாயிரத்து நானூற்று ஐம்பத்து ஆறு.

விடை : (i) 2,30,51,980 (ii) 66,345,027 (iii) 789,213,456

**10. தமிழ்நாட்டில், இருபத்து ஆறாயிரத்து முந்நூற்று நாற்பத்து ஐந்து சதுர கிலோமீட்டர் பரப்பளவு காடுகள் உள்ளன என்பதை இந்திய எண் முறையில் எழுதுக.**

விடை :

தமிழ்நாட்டில் காடுகளின் பரப்பளவு = 26,345 ச.கி.மீ

11. இந்தியத் தொடர்வண்டிப் போக்குவரத்தில் ஏறத்தாழப் பத்து இலட்சம் ஊழியர்கள் உள்ளனர். இதைப் பன்னாட்டு எண் முறையில் எழுதுக.

விடை :

இந்தியத் தொடர்வண்டிப் போக்குவரத்தில் உள்ள ஊழியர்கள் = 1,000,000 (ஒரு மில்லியன்)

## புறவய வினாக்கள்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

12. 10 மில்லியனின் தொடரி

அ) 1000001 ஆ) 10000001
இ) 9999999 ஈ) 100001

விடை : ஆ) 10000001

13. 99999 இன் தொடரி மற்றும் முன்னியின் வேறுபாடு

அ) 90000 ஆ) 1
இ) 2 ஈ) 99001

விடை : இ) 2

14. 1 பில்லியனுக்குச் சமமானது

அ) 100 கோடி ஆ) 100 மில்லியன்
இ) 100 இலட்சம் ஈ) 10,000 இலட்சம்

விடை : அ) 100 கோடி

15. 6,70,905 என்ற எண்ணின் விரிவான வடிவம்

அ) $6 \times 10000 + 7 \times 1000 + 9 \times 100 + 5 \times 1$

ஆ) $6 \times 10000 + 7 \times 1000 + 0 \times 100 + 9 \times 100 + 0 \times 10 + 5 \times 1$

இ) $6 \times 1000000 + 7 \times 10000 + 0 \times 1000 + 9 \times 100 + 0 \times 10 + 5 \times 1$

ஈ) $6 \times 100000 + 7 \times 10000 + 0 \times 1000 + 9 \times 100 + 0 \times 10 + 5 \times 1$

விடை : ஈ) $6 \times 100000 + 7 \times 10000 + 0 \times 1000 + 9 \times 100 + 0 \times 10 + 5 \times 1$

## எடுத்துக்காட்டு 1.5

59283746 மற்றும் 59283748 என்ற எண்களை இடமதிப்பு அட்டவணையைப் பயன்படுத்தி ஒப்பிடுக.

**தீர்வு :**

படி: 1 இரண்டு எண்களிலும் இலக்கங்களின் எண்ணிக்கை சமமாக உள்ளன.

படி: 2 இட மதிப்பு அட்டவணையைப் பயன்படுத்தி இடமதிப்புகளை ஒப்பிடுதல்

| இடமதிப்பு | கோடி | ப.இல | இல | ப.ஆ | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|---|---|---|---|
| முதல் எண் | 5 | 9 | 2 | 8 | 3 | 7 | 4 | 6 |
| இரண்டாம் எண் | 5 | 9 | 2 | 8 | 3 | 7 | 4 | 8 |

கீழே உள்ளவாறு இரு எண்களை உயர் இடமதிப்பிலிருந்து ஒவ்வொரு இலக்கமாக ஒப்பிடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 = 5 | 9 = 9 | 2 = 2 | 8 = 8 | 3 = 3 | 7 = 7 | 4 = 4 | 6 < 8 |

இங்கு, ஒன்றுகள் இடத்தில் அமைந்த இலக்கங்கள் மட்டும் சமமாக இல்லை $6 < 8$

எனவே, $59283746 < 59283748$

## இவற்றை முயல்க

1. பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.
688, 9, 23005, 50, 7500

விடை :

ஏறு வரிசை : 9, 50, 688, 7500, 23005

2. மிகப் பெரிய எண்ணையும், மிகச் சிறிய எண்ணையும் காண்க.
478, 98, 6348, 3, 6007, 50935

விடை : : மிகச் சிறிய எண் = 3
மிகப் பெரிய எண் = 50, 935

3. இடமதிப்பு அட்டவணையைப் பயன்படுத்தி இரு எண்களை ஒப்பிட்டு <,> மற்றும் = என்ற குறியீடுகளை இடுக.

| | | |
|---|---|---|
| 15475 | > | 3214 |
| 73204 | < | 973561 |
| 8975430 | = | 8975430 |
| 1899799 | = | 1899799 |

4. நான்கு இந்திய மாநிலங்களின் பரப்பளவுகள் சதுரகிலோ மீட்டரில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| மாநிலம் | பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|
| தமிழ்நாடு | 1,30,058 |
| கேரளா | 38,863 |
| கர்நாடகா | 1,91,791 |
| ஆந்திரப் பிரதேசம் | 1,62,968 |

மேற்காணும் நான்கு இந்திய மாநிலங்களின் பரப்பளவை ஏறுவரிசை மற்றும் இறங்கு வரிசையில் எழுதுக.

Don

விடை :

ஏறு வரிசை :

38,863 < 1,30,058 < 1,62,968 < 1,91,791

இறங்கு வரிசை :

1,91,791 > 1,62,968 > 1,30,058 > 38,863

5. 9, 4, 8 மற்றும் 5 ஆகிய நான்கு இலக்கங்களைப் பயன்படுத்தி, இலக்கங்கள் மீண்டும் வராமல் 4 இலக்க எண்களை நாம் அமைக்க வேண்டும். ஆயிரமாவது இடத்தில் 4 என்ற எண்ணை நிலையாக வைத்தால் ஆறு வகையான நான்கு இலக்க எண்களை உருவாக்கலாம். இதைப் போன்றே மற்ற எண்களை 8, 5ஐ ஆயிரமாவது இடத்தில் நிலையாகக் கொண்டு மேலும் வெவ்வேறு 4 இலக்க எண்களை அமைக்கவும்.

விடை :

| ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|
| 4 | 5 | 8 | 9 |
| 4 | 5 | 9 | 8 |
| 4 | 8 | 5 | 9 |
| 4 | 8 | 9 | 5 |
| 4 | 9 | 5 | 8 |
| 4 | 9 | 8 | 5 |

| ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|
| 8 | 4 | 5 | 9 |
| 8 | 4 | 9 | 5 |
| 8 | 5 | 4 | 9 |
| 8 | 5 | 9 | 4 |
| 8 | 9 | 4 | 5 |
| 8 | 9 | 5 | 4 |

| ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|
| 5 | 4 | 8 | 9 |
| 5 | 4 | 9 | 8 |
| 5 | 8 | 4 | 9 |
| 5 | 8 | 9 | 4 |
| 5 | 9 | 4 | 8 |
| 5 | 9 | 8 | 4 |

6. நடைப் பயிற்சியில் பயன்படுத்தப்படும் பெடோமீட்டர்கருவியில் 5 இலக்க எண்கள் உள்ளன. இதில் மிகப் பெரிய அளவு என்னவாக இருக்கும்?

விடை : 99999

## பயிற்சி - 1.2

1. கோடிட்ட இடங்களில் > (அல்லது) < (அல்லது) = குறியீடுகளைக் கொண்டு நிரப்புக:

(i) 48792 _____ 48972 விடை : <

(ii) 1248654 _____ 1246854 விடை : >

(iii) 658794 _____ 658794 விடை : =

2. சரியா, தவறா எனக் கூறுக:

i) மிகச் சிறிய ஏழு இலக்க எண்ணிற்கும் மிகப் பெரிய ஆறு இலக்க எண்ணிற்கும் இடையே உள்ள வேறுபாடு 10 ஆகும். விடை : தவறு

ii) 8, 6, 0, 9 என்ற எண்களை ஒரே ஒரு முறை மட்டும் பயன்படுத்திக் கிடைக்கப்பெறும் மிகப்பெரிய 4 இலக்க எண் 9086 ஆகும். விடை : தவறு

iii) நான்கு இலக்க எண்களின் மொத்த எண்ணிக்கை 9000 விடை : சரி

3. 1386787215, 137698890, 86720560 என்ற எண்களில் எந்த எண் மிகப் பெரியது? எந்த எண் மிகச் சிறியது?

விடை : மிகப் பெரிய எண் = 1386787215

மிகச் சிறிய எண் = 86720560

4. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை இறங்கு வரிசையில் எழுதுக.

128435, 10835, 21354, 6348, 25840

விடை :

இறங்கு வரிசை:

128435 > 25840 > 21354 > 10835 > 6348

5. பத்து லட்சம் இடத்தில் 6 என்ற எண்ணும் பத்தாயிரம் இடத்தில் 9 என்ற எண்ணும் உள்ளவாறு ஏதேனும் ஓர் எட்டு இலக்க எண்ணை எழுதுக.

விடை :

76095321, 86593214 (இதே போன்று நாம் பல எண்களை எழுதலாம்)

6. இராஜன் 4, 7 மற்றும் 9 என்ற இலக்கங்களைப் பயன்படுத்தி 3 - இலக்க எண்களை எழுதுகிறான். எத்தனை எண்களை அவனால் எழுத முடியும்?

விடை :

இலக்கங்கள்: 4, 7, 9

இராஜனால் எழுத முடிகின்ற 3 இலக்க எண்கள் = 479, 497, 749, 794, 947, 974.

7. என்னுடைய பணம் பெறும் அட்டையின் (ATM அட்டை) கடவுச் சொல் 9, 4, 6 மற்றும் 8 ஆகிய இலக்கங்களைக் கொண்டது. இது மிகச் சிறிய 4 இலக்க இரட்டை எண் ஆகும். எனது பணம் பெறும் அட்டையின் (ATM அட்டை) கடவுச் சொல் காண்க.

விடை : பணம் பெறும் அட்டையின் கடவுச் சொல்லின் இலக்கங்கள் = 9, 4, 6, 8

மிகச் சிறிய 4 இலக்க இரட்டை எண் = 4698

8. அஞ்சலகக் குறியீட்டு எண் 6 இலக்கங்களைக் கொண்டது. இதன் முதல் 3 இலக்க எண்கள் 6, 3 மற்றும் 1 ஆகும். மேலும் 0, 3 மற்றும் 6 என்ற மூன்று இலக்கங்களை ஒரு முறை மட்டுமே பயன்படுத்தி மிகப் பெரிய மற்றும் மிகச்சிறிய அஞ்சலகக் குறியீட்டு எண்களை அமைக்க.

விடை : அஞ்சலக குறியீட்டு எண்ணின் முதல் மூன்று இலக்கங்கள் = 6, 3, 1

அடுத்த மூன்று இலக்க எண்கள்: 0, 3, 6

மிகச்சிறிய அஞ்சலகக் குறியீட்டு எண் = 631036

மிகப்பெரிய அஞ்சலகக் குறியீட்டு எண் = 631630

9. தமிழ்நாட்டிலுள்ள மலைகளின் உயரங்கள் (மீட்டரில்) கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ.எண். | மலைகள் | உயரம் (மீட்டரில்) |
|---|---|---|
| 1 | தொட்டபெட்டா | 2637 |
| 2 | மகேந்திரகிரி | 1647 |
| 3 | ஆனைமுடி | 2695 |
| 4 | வெள்ளியங்கிரி | 1778 |

(i) மேற்கண்ட மலைகளில் உயரமான மலை எது?

விடை : ஆனைமுடி

(ii) உயரத்தைக் கொண்டு மலைகளின் பெயர்களை மிகப் பெரியதிலிருந்து சிறியது வரை வரிசைப்படுத்தி எழுதவும்.

விடை : ஆனைமுடி > தொட்டப்பெட்டா > வெள்ளியங்கிரி > மகேந்திரகிரி

(iii) ஆனைமுடி மற்றும் மகேந்திரகிரி ஆகிய மலைகளின் உயரங்களின் வேறுபாடு என்ன?

விடை : ஆனைமுடி மலையின் உயரம் = 2695

மகேந்திரகிரி மலையின் உயரம் = 1647

= 1048

ஆனைமுடி, மகேந்திரகிரி மலைகளின் உயரங்களின் வேறுபாடு = 1048 மீ

## புறவய வினாக்கள்

10. பட்டியலில் எந்த எண் வரிசை சிறியதிலிருந்து பெரியதாக வரிசைப்படுத்தப்பட்டு உள்ளது?

அ) 1468, 1486, 1484

ஆ) 2345, 2435, 2235

இ) 134205, 134208, 154203

ஈ) 383553, 383548, 383642

விடை : இ) 134205, 134208, 154203

11. அரபிக் கடலின் பரப்பளவு 1491000 சதுர மைல்கள். இது எந்த இரு எண்களுக்கு இடையில் அமைந்துள்ளது?

அ) 1489000 மற்றும் 1492540

ஆ) 1489000 மற்றும் 1490540

இ) 1490000 மற்றும் 1490100

ஈ) 1480000 மற்றும் 1490000

விடை : அ) 1489000 மற்றும் 1492540

12. இந்திய நாளிதழ் படிப்பவர்கள் கணக்கீட்டின்படி, 2018 இல் விற்ற நாளிதழ்களின் எண்ணிக்கையைக் காட்டும் அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அட்டவணையில் விடுபட்ட எண் என்னவாக இருக்கும்?

| நாளிதழின் பெயர் | தரம் | விற்பனை (இலட்சத்தில்) |
|---|---|---|
| A | 1 | 70 |
| B | 2 | 50 |
| C | 3 | ? |
| D | 4 | 10 |

அ) 8 ஆ) 52

இ) 77 ஈ) 26

விடை : ஈ) 26

## எடுத்துக்காட்டு 1.6

ஒரு பொருட்காட்சியில் 1 ஆவது, 2 ஆவது, 3 ஆவது மற்றும் 4 ஆவது நாள்களில் விற்ற நுழைவுச் சீட்டுகள் முறையே 1,10,000, 75,060, 25,700 மற்றும் 30,606. 4 நாள்களிலும் மொத்தமாக விற்பனை செய்யப்பட்ட மொத்த நுழைவுச் சீட்டுகள் எத்தனை?

தீர்வு :

முதல் நாள் விற்ற நுழைவுச் சீட்டுகளின் எண்ணிக்கை = 1,10,000

இரண்டாம் நாள் விற்ற நுழைவுச் சீட்டுகளின் எண்ணிக்கை = 75,060

மூன்றாம் நாள் விற்ற நுழைவுச் சீட்டுகளின் எண்ணிக்கை = 25,700

நான்காம் நாள் விற்ற நுழைவுச் சீட்டுகளின் எண்ணிக்கை = 30,606

நான்கு நாட்களில் மொத்தம் விற்ற நுழைவுச் சீட்டுகளின் எண்ணிக்கை = 2,41,366

**எடுத்துக்காட்டு 1.7**

**ஓர் ஆண்டில், மொத்த - காகித விற்பனை நிறுவனம் (whole-sale) 7,50,000 குறிப்பேடுகளில் 6,25,600 குறிப்பேடுகளை விற்பனை செய்துள்ளது. விற்பனை ஆகாத குறிப்பேடுகளின் எண்ணிக்கையைக் காண்க.**

தீர்வு :

மொத்தக் குறிப்பேடுகளின் எண்ணிக்கை = 7,50,000

விற்ற குறிப்பேடுகளின் எண்ணிக்கை = 6,25,600

விற்பனை ஆகாத குறிப்பேடுகளின் எண்ணிக்கை = 1,24,400

**எடுத்துக்காட்டு 1.8**

**ஒரு கைபேசிக் கடையில், ஒரு மாதத்தில் விற்பனையான கைபேசிகளின் எண்ணிக்கை 1250 ஆகும். ஒவ்வொரு மாதமும் அதே எண்ணிக்கையில் விற்பனையானால் இரண்டு ஆண்டுகளில் விற்பனையாகும் மொத்த கைபேசிகளின் எண்ணிக்கையைக் காண்க.**

தீர்வு :

ஒரு மாதத்தில் விற்பனையான கைபேசிகளின் எண்ணிக்கை = 1250

1 ஆண்டு = 12 மாதங்கள்

2 ஆண்டுகள் = 2 × 12

= 24 மாதங்கள்

24 மாதத்தில் விற்பனையான மொத்த கைபேசிகளின் எண்ணிக்கை

= 1250 × 24

= 30,000

2 ஆண்டுகளில் விற்பனையான மொத்த கைபேசிகளின் எண்ணிக்கை = 30,000

**எடுத்துக்காட்டு 1.9**

**ஓர் அரசுத் திட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள 500 பெண்களுக்கு ₹ 10,00,000 ஆனது சமமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு பெண்ணுக்கும் கொடுக்கப்பட்ட தொகையைக் காண்க.**

தீர்வு :

500 பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை = ₹ 10,00,000

ஒரு பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட தொகை = 10,00,000 ÷ 500

= ₹ 2000

ஒவ்வொரு பெண்ணுக்கும் கொடுக்கப்பட்ட தொகை = ₹ 2000

**எடுத்துக்காட்டு 1.10**

**சுருக்குக: $24 + 2 \times 8 \div 2 - 1$**

தீர்வு :

$24 + 2 \times 8 \div 2 - 1$

$= 24 + 2 \times 4 - 1$ (முதலில் ÷ செயல் செய்யப்பட்டது)

$= 24 + 8 - 1$ (இரண்டாவதாக × செயல் செய்யப்பட்டது)

$= 32 - 1$ (மூன்றாவதாக + செயல் செய்யப்பட்டது)

$= 31$ (இறுதியாக − செயல் செய்யப்பட்டது)

**எடுத்துக்காட்டு 1.11**

**சுருக்குக: $20 + [8 \times 2 + \{\overline{(6 \times 3) - (10 \div 5)}\}]$**

தீர்வு :

$= 20 + [8 \times 2 + \{(6 \times 3) - (10 \div 5)\}]$

$= 20 + [8 \times 2 + \{(6 \times 3) - 2\}]$

(முதலில் ÷ செய்யப்பட்டது)

$= 20 + [8 \times 2 + \{18 - 2\}]$

(இரண்டாவதாக × செயல் செய்யப்பட்டது)

$= 20 + [8 \times 2 + 16]$ (மூன்றாவதாக { } செய்யப்பட்டது)

$= 20 + [16 + 16]$ (நான்காவதாக × செயல் செய்யப்பட்டது)

$= 20 + 32$ (ஐந்தாவதாக [ ] செய்யப்பட்டது)

$= 52$ (இறுதியாக + செயல் செய்யப்பட்டு)

## பயிற்சி - 1.3

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

i) அருள்மொழி ஒரு நாளில் ₹ 12 சேமித்தால், 30 நாட்களில் ₹ ________ சேமிப்பாள். **விடை** : 360

ii) 'A' என்பவர் 12 நாட்களில் ₹ 1800 வருமானம் பெறுகிறார் எனில் ஒரு நாளில் ₹ ________ ஐப் பெறுவார். **விடை** : 150

iii) $45 \div (7+8) - 2 =$ ________. **விடை** : 1

**2. சரியா, தவறா எனக் கூறுக:**

(i) $3 + 9 \times 8 = 96$ **விடை** : தவறு

(ii) $7 \times 20 - 4 = 136$ **விடை** : சரி

(iii) $40 + (56 - 6) \div 2 = 45$ **விடை** : தவறு

**3. கடந்த ஐந்து மாதங்களில் ஒரு குறிப்பிட்ட பொது நூலகத்திற்கு வருகை புரிந்தவர்களின் எண்ணிக்கை முறையே 1200, 2000, 2450, 3060 மற்றும் 3200. ஐந்து மாதங்களில் அந்த நூலகத்திற்கு வருகை புரிந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்?**

**தீர்வு :**

முதல் மாதம் நூலகத்திற்கு வருகை புரிந்தவர்கள் = 1,200

இரண்டாம் மாதம் நூலகத்திற்கு வருகை புரிந்தவர்கள் = 2,000

மூன்றாம் மாதம் நூலகத்திற்கு வருகை புரிந்தவர்கள் = 2,450

நான்காம் மாதம் நூலகத்திற்கு வருகை புரிந்தவர்கள் = 3,060

ஐந்தாம் மாதம் நூலகத்திற்கு வருகை புரிந்தவர்கள் = 3,200

மொத்தம் வருகை புரிந்தவர்கள் = 11,910

நூலகத்திற்கு ஐந்து மாதங்களில் மொத்தம் வருகை புரிந்தவர்கள் = 11,910

**4. சேரன் வங்கியில் சேமிப்பாக ₹ 7,50,250 ஐ வைத்திருந்தார். கல்விச் செலவிற்காக ₹ 5,34,500 ஐத் திரும்ப எடுத்தார். அவரின் கணக்கிலுள்ள மீதித் தொகையைக் காண்க.**

**தீர்வு :**

சேரன் வங்கியில் சேமித்து வைத்திருந்த தொகை = ₹ 7,50,250

கல்விச் செலவிற்காக எடுத்தது = ₹ 5,34,500

மீதித் தொகை = ₹ 2,15,750

சேரன் கணக்கிலுள்ள மீதித் தொகை = ₹ 2,15,750

**5. ஒரு மிதிவண்டித் தொழிற்சாலையில், ஒரு நாளைக்கு 1560 மிதிவண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன எனில், 25 நாள்களில் எத்தனை மிதி வண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன?**

**தீர்வு :**

ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யப்பட்ட மிதிவண்டிகள் = 1560

25 நாள்களில் உற்பத்தி செய்யப்பட்ட மிதிவண்டிகள் $= 1560 \times 25$

= 39,000

**6. ஒரு நிறுவனம் புது ஆண்டிற்கான வெகுமதித் தொகையாக (போனஸ்) ₹ 62,500 ஐ 25 ஊழியர்களுக்குச் சமமாகப் பங்கிட்டு வழங்கியது. ஒவ்வொருவரும் பெற்ற தொகை எவ்வளவு?**

**தீர்வு :**

25 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வெகுமதித் தொகை = ₹ 62,500

ஒருவருக்கு வழங்கப்பட்ட வெகுமதித் தொகை $= \frac{62,500}{25} = 2,500$

**7. சுருக்குக:**

**i)** $(10 + 17) \div 3$

**ii)** $12 - [3 - \{6 - (5 - 1)\}]$

**iii)** $100 + 8 \div 2 + \{(3 \times 2) - 6 \div 2\}$

**தீர்வு :**

i) $(10 + 17) \div 3$ (வினா)

$= 27 \div 3$ (முதலில் ( ) செயல் செய்யப்பட்டது)

$= 9$ (இறுதியாக ÷ செயல் செய்யப்பட்டது)

ii) $12 - [3 - \{6 - (5 - 1)\}]$ (வினா)

$= 12 - [3 - \{6 - 4\}]$ (முதலில் ( ) செய்யப்பட்டது)

$= 12 - [3 - 2]$ (இரண்டாவதாக { } செய்யப்பட்டது)

$= 12 - 1$ (மூன்றாவதாக [ ] செய்யப்பட்டது)

$= 11$ (இறுதியாக − செயல் செய்யப்பட்டது)

iii) $100 + 8 \div 2 + \{(3 \times 2) - 6 \div 2\}$ (வினா)

$= 100 + 8 \div 2 + \{(6 - 6 \div 2\}$ (முதலில் ( ) செய்யப்பட்டது)

$= 100 + 8 \div 2 + \{(6 - 3\}$ (இரண்டாவதாக ÷ செயல் செய்யப்பட்டது)

$= 100 + 8 \div 2 + 3$ (மூன்றாவதாக − செயல் செய்யப்பட்டது)

$= 100 + 4 + 3$ (நான்காவதாக ÷ செயல் செய்யப்பட்டது)

$= 107$ (இறுதியாக + செயல் செய்யப்பட்டது)

Don

## புறவய வினாக்கள்

8. $3 + 5 - 7 \times 1$ இன் மதிப்பு

அ) 5 ஆ) 7 இ) 8 ஈ) 1

விடை : ஈ) 1

9. $24 \div \{8 - (3 \times 2)\}$ இன் மதிப்பு

அ) 0 ஆ) 12 இ) 3 ஈ) 4

விடை : ஆ) 12

10. BIDMAS ஐப் பயன்படுத்திச் சரியான குறியீட்டைக் கட்டத்தில் நிரப்புக:

$2 \square 6 - 12 \div (4 + 2) = 10$

அ) + ஆ) − இ) × ஈ) ÷

விடை : இ) ×

### எடுத்துக்காட்டு 1.12

8,436 ஐ நூறுகளுக்கு முழுமைப்படுத்துக.

| படி | செய்ய வேண்டியவை | 8,436-ஐ நூறுகளுக்கு முழுமையாக்குதல் |
|---|---|---|
| படி 1 | நூறாவது இடமதிப்பில் உள்ள எண்ணைக் காண்க. | 8,436 |
| படி 2 | 4 இன் வலதுபக்க எண்ணைப் பார்க்க. (பத்தாம் இட மதிப்பு) | 8,436 |
| படி 3 | 4 இன் வலது பக்க எண் 5 இக்குச் சமமாகவோ அல்லது 5 ஐ விட அதிகமாகவோ இருந்தால் 1 ஐக் கூட்ட வேண்டும். 5 ஐ விடக் குறைவாக இருந்தால், அதை மாற்றத் தேவையில்லை. | 8,436 (3 < 5) ஆகவே 4 ஐ மாற்றத் தேவையில்லை. |
| படி 4 | 4 என்ற எண்ணின் வலதுபக்க இலக்கங்களைப் பூச்சியங்களாக ஆக்குக. | 8,400 |

### எடுத்துக்காட்டு 1.13

78,794 ஐ ஆயிரங்களுக்கு முழுமைப்படுத்துக.

| படி | செய்ய வேண்டியவை | 78,794 ஐ ஆயிரங்களுக்கு முழுமையாக்குதல் |
|---|---|---|
| படி 1 | ஆயிரமாவது இடமதிப்பில் உள்ள எண்ணைக் காண்க. | 78,794 |
| படி 2 | 8 இன் வலது பக்க எண்ணைப் பார்க்க. (நூறின் இட மதிப்பு) | 78,794 |
| படி 3 | 8 இன் வலது பக்க எண் 5 இக்குச் சமமாகவோ அல்லது 5 ஐ விட அதிகமாகவோ இருந்தால் 1 ஐக் கூட்ட வேண்டும். 5 ஐ விடக் குறைவாக இருந்தால், அதை மாற்றத் தேவையில்லை. | 78,794 8 உடன் 1 ஐச் சேர்த்து 9 என எழுதலாம். (அதாவது, 8 + 1 = 9) (ஏனெனில், 7 > 5) |
| படி 4 | 79 என்ற எண்ணின் வலதுபக்க இலக்கங்களைப் பூச்சியங்களாக ஆக்குக. | 79,000 |

### எடுத்துக்காட்டு 1.14

ஒரு நகை வியாபாரி தனது வங்கிக் கணக்கில் ஜனவரி மாதம் ₹ 17,53,740 உம் பிப்ரவரி மாதம் ₹ 15,34,300 உம் செலுத்துகிறார். அவர் இரு மாதங்களில் செலுத்திய தொகையின் கூடுதலையும் வித்தியாசத்தையும் ஆயிரத்தில் முழுமைப்படுத்தி உத்தேச மதிப்பைக் காண்க.

**தீர்வு :**

கீழ்க்கண்டவாறு ஆயிரங்களில் முழுமைப்படுத்த வேண்டும்.

| | உண்மையான தொகை | உத்தேச தொகை |
|---|---|---|
| ஜனவரி மாதத்தில் செலுத்திய தொகை | ₹ 17,53,740 | ₹ 17,54,000 |
| பிப்ரவரி மாதத்தில் செலுத்திய தொகை | ₹ 15,34,300 | ₹ 15,34,000 |
| மொத்தம் செலுத்திய தொகை | ₹ 32,88,040 | ₹ 32,88,000 |
| செலுத்திய தொகைகளின் வித்தியாசம் | ₹ 2,19,440 | ₹ 2,20,000 |

### எடுத்துக்காட்டு 1.15

திருக்குறள் நூலின் ஒரு பிரதியின் விலை ₹ 188 எனில், 31 திருக்குறள் நூல் பிரதிகளின் உத்தேசத் தொகை எவ்வளவு? (குறிப்பு : 188 ஐ நூறுக்கும் மற்றும் 31 ஐ பத்துக்கும் அருகிலுள்ள எண்ணிற்கு முழுமைப்படுத்துக.)

**தீர்வு :**

188 என்ற எண் 200 இக்கு அருகில் உள்ளது. 31 என்ற எண் 30 இக்கு அருகில் உள்ளது. ஆகவே 31 பிரதிகளின்

சரியான விலை = 188 × 31 = ₹ 5,828 ஆகவும்,
உத்தேச விலை = 200 × 30 = ₹ 6,000 ஆகவும் இருக்கும்
ஆகவே, 31 திருக்குறள் நூல்பிரதிகளின் உத்தேச தொகை ₹ 6,000

**எடுத்துக்காட்டு 1.16**

**5598 ÷ 689 இன் உத்தேச மதிப்பைக் காண்க.**

**தீர்வு :**

5598 இன் முழு மதிப்பு 5600
689 இன் முழு மதிப்பு 700

| சரியான மதிப்பு | உத்தேச மதிப்பு |
|---|---|
| 689 ) 5598 ( 8<br>5512<br>86 | 700 ) 5600 ( 8<br>5600<br>0 |

ஆகவே 5598 ÷ 689 இன் உத்தேச மதிப்பு 8 ஆகும்.

**இவற்றை முயல்க**

**1. பின்வரும் எண்களை அருகிலுள்ள பத்துகளுக்கு முழுமையாக்குக.**
**(i) 57 (ii) 189 (iii) 3,956 (iv) 57,312**

**தீர்வு :**

i) 57 ஐ பத்துகளுக்கு முழுமையாக்கினால் மதிப்பு = 60
ii) 189 ஐ பத்துகளுக்கு முழுமையாக்கினால் மதிப்பு = 190
iii) 3,956 ஐ பத்துகளுக்கு முழுமையாக்கினால் மதிப்பு = 3,960
iv) 57,312 ஐ பத்துகளுக்கு முழுமையாக்கினால் மதிப்பு = 57,310

**2. பின்வரும் எண்களை அருகில் உள்ள பத்துகள், நூறுகள் மற்றும் ஆயிரங்களுக்கு முழுமையாக்குக.**
**(i) 9,34,678**
**(ii) 73,43,489**
**(iii) 17,98,45,673**

**தீர்வு :**

i) 9,34,678 ஐ பத்துகளுக்கு முழுமையாக்கினால் மதிப்பு = 9,34,680
9,34,678 ஐ நூறுகளுக்கு முழுமையாக்கினால் மதிப்பு = 9,34,700
9,34,678 ஐ ஆயிரங்களுக்கு முழுமையாக்கினால் மதிப்பு = 9,35,000

